DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 351/2024

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வாசுதேவன் |
| Father / Husband Name | லட்சுமணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30. 09.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒரத்தியில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். சாட்சி முத்துலட்சுமி என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 17.05.2022 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு நானும் முத்துலட்சுமியும் எலப்பாக்கம் நோக்கி சென்றுக்கொண்டிருந்தபோது ஏழுமலை என்பவரின் வீட்டின் அருகே போலிசார் சண்டை வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. அன்றைய தினம் சம்பவயிடத்தில் வைத்து சுமார் 3 அடி நீளம் உள்ள சவுக்கு கட்டை ஒன்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.